19-10-14 Dinathanthi




கோயம்பேடு – ஆலந்தூர் இடையே மெட்ரோ ரெயில் பாதையில் ஜெர்மன் தொழில் நுட்பத்தில் அமைக்கப்பட்டுள்ள அதிநவீன வசதிகள் கொண்ட சிக்னல்களை படத்தில் காணலாம்.

### ஜனவரியில் சேவை தொடங்க இருக்கும் நிலையில்

# கோயம்பேடு – ஆலந்தூர் இடையே இறுதிக்கட்ட சிக்னல் சோதனை

## நவம்பரில் ரெயில்வே பாதுகாப்பு ஆணையர் ஆய்வு

சென்னை, அக்.19–

கோயம்பேடு– ஆலந்தூர் இடையே ஜனவரியில் மெட்ரோ ரெயில் சேவை தொடங்க இருக்கும் நிலையில், இறுதிக்கட்ட சிக்னல் சோதனைகள் நடந்து வருகிறது.

### சிக்னல் சோதனை

சென்னையில் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில் மெட்ரோ ரெயில் சேவை பணிகள் நடந்து வருகிறது. இதில் முதல்கட்டமாக கோயம்பேடு முதல் ஆலந்தூர் வரை 10 கிலோ மீட்டர் தூரத்திற்கு பறக்கும் பாதையில் பணிகள் நிறைவடைந்துள்ளன. இறுதிக்கட்ட சிக்னல் சோதனைகள் தற்போது நடந்து வருகிறது.

பயணிகளுடன் சென்று கொண்டிருக்கும் மெட்ரோ ரெயில் திடீரென்று பழுதாகி பாதிவழியில் நின்றுவிட்டால், பின்னால் வரும் மெட்ரோ ரெயில் ஒரு குறிப்பிட்ட தூரத்தில் தானாகவே நின்றுவிடும் வகையில் அதிநவீன தொழில் நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

அதேபோல் என்ஜின் டிரைவரும் கவனக்குறைவால் தவறு செய்தாலும், ரெயில் தானாகவே நின்றுவிடும் வகையில் அதிநவீன கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.

### பொங்கலில் சேவை தொடக்கம்

இவற்றை உத்தரபிரதேசம் மாநிலம் லக்னோவில் உள்ள இந்தியன் ரெயில்வே ஆராய்ச்சி, வடிவமைப்பு மற்றும் தரத்துக்கான அமைப்பின் (ஆர்.டி.எஸ்.ஓ.) அதிகாரிகள் குழுவினரும் சோதனை நடத்தி, சான்றிதழும் வழங்கி உள்ளனர். இதனைதொடர்ந்து பெங்களூரில் உள்ள ரெயில்வே பாதுகாப்பு ஆணையர் இறுதிக்கட்ட ஆய்வு செய்து சான்றிதழ் வழங்க உள்ளார்.

இந்த சான்றிதழ் டிசம்பர் மாதத்தில் கிடைக்கப்பெற்ற உடன், ஜனவரி மாதம் பொங்கலையொட்டி இந்தப்பாதையில் ரெயில் சேவை தொடங்கப்பட உள்ளது. இதற்காக ரெயில் பாதைகளில் இறுதிக்கட்ட சோதனை நடந்து வருகிறது.

இதுகுறித்து மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் கூறியதாவது:–

### ஐ.எஸ்.ஏ. சான்று

கோயம்பேடு முதல் ஆலந்தூர் வரை ரெயிலை இயக்குவதற்கான அனைத்து பணிகளும் முடிவடைந்துள்ளன. ரூ.200 கோடி செலவில் சீமென்ஸ் நிறுவனத்தின் ஜெர்மன் நாட்டு நிபுணர்கள் உலக தரத்தில் சிக்னல்கள் அமைத்துள்ளனர்.

இந்நிறுவனத்தைச் சேர்ந்த நிபுணர்கள் 'இண்டிபெண்டன்ட் சிக்னல் அசெஸர்' (ஐ.எஸ்.ஏ) சான்று வழங்க வேண்டும்.

இதற்காக அவர்கள் முதல் கட்டமாக கோயம்பேடு முதல் ஆலந்தூர் வரை அமைக்கப்பட்டுள்ள சிக்னல்களை ஆய்வு செய்துவிட்டு, ஜெர்மன் சென்றுள்ளனர். இவர்கள் மீண்டும் சென்னைக்கு வந்து ரெயில் தண்டவாளங்கள், ரெயிலில் உள்ள கணினி கருவிகளையும் சோதனை செய்ய உள்ளனர். வரும் நவம்பர் 15–ந் தேதி ஆய்வுக்கான சான்றிதழை வழங்க உள்ளனர்.

### பாதுகாப்பு ஆணையர் ஆய்வு

இந்த சான்றிதழை, பெங்களூரில் உள்ள ரெயில்வே பாதுகாப்பு ஆணையர் எஸ்.கே. மிட்டல் அலுவலகத்தில் ஒப்படைக்க உள்ளோம். முன்னதாக மிட்டல் அலுவலகத்துக்கு சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் பணிகள் குறித்து 15 ஆயிரம் பக்கங்கள் கொண்ட ஆவணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதனை அவர்கள் ஆய்வு செய்துவிட்டு நவம்பர் மாதம் இறுதியில் சென்னைக்கு வந்து ஆய்வு செய்துவிட்டு, டிசம்பர் மாதத்தில் ஆய்வு சான்றிதழை வழங்க உள்ளனர். தொடர்ந்து வருகிற ஜனவரி 15–ந்தேதி வாக்கில் ரெயில் போக்குவரத்தை தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வாறு அதிகாரிகள் கூறினர்.